குருனாகல் மாநகர சபை - 2022

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

குருனாகல் மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252) ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

.

குருனாகல் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புகணக்காய்வு அவதானிப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணகீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்க இணங்க செயற்படுத்தப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நீர் வழங்கல் வைப்பு ரூபா 227,000 இனாலும், செலுத்தப்பட்டுள்ள ரூபா 1,619,989 தொகையான 09 நானாவித வைப்புக்கள் செலுத்தப்படாத வைப்புக்களாகவும், ரூபா 2,288,127 தொகையான 05 நானாவித வைப்புக்கள் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டும் வைப்புக் கணக்கு அப்பெறுமதிகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நீர் வழங்கல் வைப்பு ரூபா 129,609 ஆலும் நானாவித வைப்பு ரூபா 1,877,235 ஆலும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய பணத்தை பட்டோலைகளுக்கு பிரதியிடும் போது இடம்பெற்ற தவறாகும். அதற்கிணங்க பட்டோலைகள் சரி செய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவுக் கடன்கொடுத்தோர் ரூபா 728,682,823 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை சேர்ந்துள்ள மீதிகளின் மொத்தமாகும். அதற்கிணங்க 2023 சனவரி 31 இல் உள்ளவாறு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட பணத்தை கழித்ததன் பின்னர் மிகுதியாக உள்ள மீதி குறிப்பிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | நீதிமன்ற தண்டப் பணம் முன்னைய ஆண்டில் ரூபா 1,053,350 ஆலும் மீளாய்வாண்டில் ரூபா 3,822,100 ஆலும் முத்திரைக் கட்டணம் ரூபா 86,155,560 ஆலும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் சம்பந்தமான கொடுப்பனவு விபரம் பிரதம செயலாளர் அலுவலகத்திடமிருந்து கிடைத்திருக்காததுடன் அதன் காரணமாக முறையாக நிலுவைகளை இனங்காண்பதற்கு முடியாதுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் பொதுச் செயற்பாடுகளுக்காக கிடைத்த ரூபா 12,500,000 பெறுமதியான 02 ரூட் 18.7 பேர்சஸ் அளவான காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | ஊழியர் பிணை வைப்புக் கணக்கு பொறுப்புக்கள் மீதியும் சொத்துக்கள் மீதியும் சமமாக காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பொறுப்புக்களாக ரூபா 1,187,440 தொகையும் சொத்துக்களாக ரூபா 1,200,313 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 சனவரி மாத வைப்புப் பணத்தில் 2021 திசெம்பர் மாதம் நாளாந்த சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட பிணைவைப்பு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் மாதம் நாளாந்த சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட பிணை வைப்புக்கள் 2023 ஆம் ஆண்டின் போது பிணை முதவலீடு உள்ளடக்கப்பட்டதன் காரணமாக இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | குத்தகை முறைமையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் குத்தகை கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 2,151,256 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | குத்தகை கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (எ) | குத்தகை வட்டிக் கணக்கு ரூபா 17,878 ஆலும் நிலையான வைப்பு வட்டி கணக்கு ரூபா 368,135 ஆலும் வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்திருந்தது. | குத்தகை வட்டிக் கணக்கின் மீதியும் நிலையான வைப்பு வட்டிக் கணக்கின் மீதியும் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஏ) | நிலையான வைப்புக்களிலிருந்து மீளாய்வாண்டிற்கான கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 551,184 கணக்கீட செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வட்டி ரூபா 551,184 பணம் சரியாக கணக்கீடு செய்யப்படும். | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலப்பு முற்பண மீதியினுள் தீர்த்துவைக்கப்பட்ட ரூபா 24,923,702 பெறுமதியான 07 முற்பண மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கலப்பு முற்பணங்களை கபட்டோலைக்கு பிரதி பண்ணும் போது இடம்பெற்ற தவறாகும். உரிய கபட்டோலை சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஒ) | பொது மற்றும் மின்சார களஞ்சியத்திற்குரிய பொருட்கள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க ரூபா 1,447,137 பெறுமதியான 59 இருப்பு விடயங்களின் பற்றாக்குறையும் ரூபா 173,984 பெறுமதியான 27 இருப்பு விடயங்களின் மிகைகளும் காணபப்பட்டதுடன் அந்த மிகையான இருப்பு மீதியும் பற்றாக்குறையான இருப்பு மீதியும் மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருக்கவில் லை. | பொருள் மீளாய்வு அறிக்கை கிடைத்திருக்காததன் காரணமாக உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. 2023 ஆம் ஆண்டின் போது இதற்கான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஓ) | மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பின் கீழ் தொலைபேசிப் படியும் எரிபொருள் படியும் முறையே | அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களுக்கு தகமையுள்ள படியாக | மீளளிப்புச் செய்யாத படியினை வேண்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 264,937 மற்றும் ரூபா 611,700 கணக்கீடு செய்யப்பட்டதனால் அப்பெறுமதியால் சம்பள மீளளிப்பு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இருப்பதனால் மீளளிப்புச் செய்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்த படி மீளளிப்புச் செய்யப்படாமையின் காரணமாக இந்த மீதி உருவாகியுள்ளது. | வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுந்தராபொல கழிவுப் பொருள் நிலையத்தில் காணப்பட்ட ரூபா 4,364,443 பெறுமதியான பசளை பேக் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுந்தராபொல கழிவுப் பொருள் நிலையத்தின் இறுதி இருப்புக்கு உரிய பசளை பேக்கின் பெறுமதியை உள்ளடக்கி சரி செய்யப்படும். | சபையின் நானாவித அலகுகளில் காணப்படும் இருப்பு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 661,525 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதிய மீதி சரிசெய்யப்படும். | சரியான மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (கா) | மாநகர சபையினால் மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய செலவு கடன்கொடுத்தோர்களை உறுதியாக இனங்காணக் கூடியதாக இருந்தும் இதற்காக கருதப்பட்ட நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக மீளாய்வாண்டிலும் கடன்கொடுத்தோர் ரூபா 1,459,721,790 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டில் மிகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன்கொடுத்தோரை தீர்த்துவைத்து சரி செய்யும் குறிக்கோளில் இந்த கடன்கொடுத்தோரை பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதியாக இனங்கண்டு இக்கடன்கொடுத்தோரை ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் 19 வெளித்தரப்பின்ர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டதுடன் சபைக்கு எதிராக 12 வெளித்தரப்பினர்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளித்தரப்பினர்களுக்கு தொடுக்கப்பட்டுள்ள வழக்கு நிகழத்தக்க பொறுப்புக்களாக கணக்கீட்டு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்படும். | வழக்கு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ரூபா 2,775,676,122 மொத்த தொகையான 17 கணக்கு விடயங்கள் மீதிக்கும் பட்டோலைகளில் காட்டப்படுகின்ற மீதிக்குமிடையே ரூபா 207,846,280 வித்தியாசம் காணப்பட்டது. | 17 கணக்கு விடயங்கள் தொடர்பான பட்டோலைகள் திர்த்துவைக்கப்பட்டு வருவதுடன் அடுத்துவரும் காலங்களில் உரிய பட்டோலை சரி செய்யப்படும். | கணக்கிணக்கமின்மைக் கான காரணத்தை பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடன் மீதிகளின் உறுதிப்படுத்தல்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன் மீதிகளை ஒப்பீடு செய்த போது ரூபா 164,602 குறைவு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | உரிய செம்மையாக்கல் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 03 நிலையான வைப்பு மீதிகளுக்கும் வங்கியின் உறுதிப்படுத்தல் கடிதங்களில் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 5,162,143 வித்தியாசம் காணப்பட்டது. | நிலையான வைப்புக் கணக்கின் மீதி சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வு சான்று | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ரூபா 2,527,198,696 தொகையான நிலையான சொத்துக்கள் இருப்புக்கள் கடன்கொடுத்தோர் மீதிகளுக்குரிய பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகப் பரீட்சிக்க முடியாதிருந்தது. | பட்டோலைகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் துரிதமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் உறுதிப்படுத்துவதற்காக போதியளவானதும் பொருத்தமானதுமான சான்றுகளை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் 188 ஆம் பிரிவு | மாநகர சபை கட்டளைச் சட்டத்தினை ஈடுபடுத்துதல் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் வழங்கப்படாதுள்ள மாநகர சபை உறுப்பினரின் சுகயீன நிலைமைக்காக உதவிசெய்யும் வகையில் 2022 ஏப்ரல் 05 ஆந் திகதிய 198 ஆம் இலக்க வவுச்சரின் மூலம் ரூபா 1,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டது. | சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது. | மேற்கூறிய கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கொவையின் | அரசாங்கத்தின் வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு பட்டியல்படுத்தப்பட்ட | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் காலங்களில் | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.4.1 ஆம் பிரிவு | வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை இருக்குமாகவிருந்தால் அந்த உத்தியோகத்தரின் சம்பளத்தில் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவீடு செய்யாது நகர சபையினால் 2021 ஆகஸ்ட் மாதம் GC/06/01/2021/8/5/MA/R 9 ஆம் இலக்க சபையின் இண்கப்பாட்டின் அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து தற்பொழுது அறவிடப்படுகின்ற மாதாந்த வாடகைக்கு 20 சதவீதத்தினை அதிகரித்து வீட்டு வாடகையை அறவீடு செய்வதற்கு திர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தாபன விதிக்கோவையின் பிரகாரம் வாடகை அறவிட்படாமையால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வாடகை ரூபா 221,589 குறைத்து அறவீடு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட நபருக்காக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371(3) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 776,181 தொகையான முற்பணங்கள் திர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | மேற்கூறிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 12,835,988 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 759,129,083 ஆகும்.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிழந்த காசோலை பட்டோலைக்கு இணங்க 01 மாத்திலிருந்து 15 ஆண்டுகள் வரை காணப்பட்ட மதிப்பிழந்த 23 காசோலைகள் தொடர்பாக ரூபா 1,155,634 தொகையான மீதியை மீளாய்வாண்டு வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிழந்த 23 காசேலைகள் தொடர்பான மீதி 2023 ஆம் ஆண்டின் போது தீர்த:தவைப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை வங்கி கணக்கின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் சுற்றுக்களுக்கு இணங்க காசேட்டு மீதி ரூபா 18,747,889 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் காசேட்டின் மீதியாக ரூபா 63,879 இருந்ததனால் ரூபா 18,684,010 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வங்கி கணக்கிணக்கக்கூற்றில் ரூபா 18,684,010 பணம் இனங்காண முடியாத கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | மீதிகளை இனங்கண்டு சரியாக வங்கி கணக்கிணக்கத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்பட்ட வருமானம ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 369,500 | 344,497 | 355,480 | 255,777 | 354,500 | 338,186 | 290,396 | 253,166 |
| வாடகை | 88,824 | 71,367 | 72,414 | 14,584 | 99,108 | 66,358 | 65,248 | 13,106 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 15,380 | 19,489 | 19,489 | - | 15,430 | 12,834 | 12,834 | - |
| ஏனைய வருமானம் | 539,427 | 423,604 | 523,956 | 42,960 | 753,702 | 383,442 | 380,001 | 146,382 |
| | ---------- | ----------- | -------- | -------- | ---------- | --------- | -------- | --------- |
| மொத்தம் | 1,013,131 | 858,957 | 971,339 | 313,321 | 1,222,740 | 800,820 | 748,479 | 412,654 |
| | ===== | ====== | ===== | ===== | ====== | ===== | ===== | ===== |

## 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

### வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை குருனாகல் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 508 கட்டிடங்களை நிழர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் இக்கட்டிடங்களிலிருந்து வீதவரியினை அறவீடு செய்வதற்கு நமடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது வழங்கப்பட்ட இணக்கப்பாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை 399 ஆக இருந்ததுடன் அந்த ஆதனங்களக்கு மத்தியில் 309 ஆதனங்கள் புதிய வீதவரி ஆதனமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தன. | சபைக்கு வருமானத்தை உழைக்கும் வழிகளை ஆராய்ந்து பார்த்து வருமானதம்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### வாடகை

| | | |
|---|---|---|
| மாநகர சபையின் 261 கடைகளிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை ரூபா 8,110,667 நிலுவை வாடகைப் பணத்தையும் ரூபா 555,975 தண்டப் பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று மாதங்களுககுக மேல் நிலுவையாகவிருந்த அனைத்து வாடகைகளுக்குமான நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு வருமானத்தை உழைக்கும் வழிகளை ஆராய்ந்து பார்த:து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட கழிவுநீர் முறைமையின் நிலுவை வருமான மீதி ரூபா 86,890,230 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 11,991,634 மீளாய்வாண்டில் கிடைத்துள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிற்காக பட்டோலையிடப்பட்ட ரூபா 46,415,580 தொகையில் ரூபா 12,788,270 கிடைத்துள்ளது. ஆண்டின் இறுதித் திகதியில் கிடைக்க வேண்டிய கழிவுநீர் முறைமையின் நிலுவை மீதி ரூபா 108,225,898 ஆகும். | நிலுவை வருமான பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானங்களையும் பட்டியலிடப்பட்ட வருமானங்களையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபை பிரதேசத்தின் 12 பிரிவுகளில் காட்சிப்படுத்தப்படும் 128 விளம்பரப் பலகைகளின் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய 2022 ஆம் ஆண்டு தொடர்பான நிலுவை ரூபா 7,592,550 ஆகும். | இப்பலகைகளுக்காக 2022 ஆம் ஆண்டு தொடர்பான காட்சிப்படுத்தல் கட்டணங்களை செலுத்துமாறு உரிய நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அப்பணம் செலுத்தப்படவில்லையாயின் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | துணை நியதிச்சட்டத்திற்கு இணங்க நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது நகரபிதாவின் உத்தியோகபூர்வ அறைக்காக கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் தொடர்பான பௌதீக பரீட்சிப்பின் போது ரூபா 329,450 பெறுமதியான 29 கதிரைகள் பொருளை வழங்கிய தனிப்பட்ட நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அக்கதிரைகளுக்காக நிறுவனத்திற்கு | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | பொருட்ளை வழங்கியதன் பின்னர் பணத்தை செலுத்த வேண்டியதுடன் வழங்கப்படாத பொருட்களுக்காக பணத்தை செலுத்தியதன் காரணமாக ஏற்பட்ட நட்டத்திற்கு |

| | | |
|---|---|---|
| பணம் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்காக திருப்பி அனுப்பிய 29 கதிரைகளுக்கும் பதிலாக மீண்டும் 29 கதிரைகளை குருனாகல் மாநகர சபையினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| குருனாகல் நகரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய கழிவுநீர் வடிகாலமைப்புத் திட்டத்தை (Master Drainage Plan) திருத்தம் செய்வதற்கான களப் பரிசோதனைக்காக 2022 மே 17 ஆந் திகதி ரூபா 540,000 பணம் வெட் வரியுடன் சேர்த்து ஒரு முற்பணமாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டது. 2022 மே 06 ஆந் திகதிய GC/06/62/2022/04/20/MED/C7 ஆம் இலக்க பொதுச் சபை இணக்கப்பாட்டிற்கு இணங்க குருனாகல் நகரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்பாட்டை துரிதமாக முடிவுறுத்த வேண்டிய தேவைப்பாடாக இந்த நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இறுதி அங்கீகாரத்தின் பின்னர் சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | திட்டங்களோடு நடவடிக்கை எடுத்து விளைவற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டம். |

**3.3 பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டுள்ள வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க சபையினால் நிறைவேற்றவேண்டியிருந்த ரூபா 11,197,871 பாதீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட 22 நிர்மாண வேலைகள் மிளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் விலை அதிகரித்ததன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் நிறைவேற்றுவதற்கு முடியாமையின் அடிப்படையில் அமுல்ப்படுத்துவதற்கு முடியவிலலை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி எற்பாட்டின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 123 மில்லியன் பெறுமதியான சுவசிமா சேதனப் பசளை இயந்திரம் சுந்தராபொல கழிவுப் பொருள் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தின் இயலளவு 50 தொன்களாக இருந்த போதிலும் ஒரு நாளைக்கு 30 தொன்கள் அளவான கழிவுப் பொருட்கள் ஈடுபடுத்தப்படுவதனால் உச்ச இயலளவு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கவசிமா இயந்திரத்தினை பயன்படுத்தும் இயலளவு 50 தொன்களாக இருந்ததுடன் எதிர்கால நிலைமையையும் முன்னறிந்து இந்த இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. குருனாகல் மாநகரசபை பிரதேசத்தில் நாளாந்தம் உருவாகும் கழிவுப் பொருளின் அளவு 30 தொன்களாகும். | இயந்திரத்தின் உச்ச இயலளவினை பயன்பாட்டிற்கு எடுத்து சேதனப்பசளையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மாதாந்தம் 600,000 கிலோகிராம் கழிவுப் பொருட்கள் கழிவப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு ஒன்றுசேர்க்கப்படுவதுடன் அந்த உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி அலகின் அளவு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படாததுடன் மீளாய்வாண்டின் போது 188,336 கிலோகிராம் விற்பனை செய்யப்பட்டு ரூபா 1,883,362 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | இந்த நிலைமையை நிருவகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உக்குகின்ற கழிவுப் பொருட்கள் மற்றும் உக்காத கழிவுப் பொருட்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (iii) | 18,043 கிலோகிராம் உக்காத கழிவுப் பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 399,709 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் ஹொல்சீம் நிறுவனத்திற்கு 48 தொன் அளவிலான உக்காத கழிவுப் பொருட்கள் | -மேற்படி- | உக்காத கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகைகளில் முறையாக அப்புறப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தும் இது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் மாநகர சபையின் 571 கடைகளிலிருந்து 2005 ஆம் ஆண்டில் அறவிட்ட வாடகையே மீண்டும் மதிப்பீடு செய்யப்படாது அறவிடப்பட்டிருந்தது. | கடைகளின் புதிய மதிப்பீடு தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய கடிதம் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த மாதத்திலேயே பொதுச் சபைக்கு உரிய தகவல்களை அனுப்பி உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | நிகழ்கால மதிப்பீட்டிற்கு இணங்க கடைவாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நில எல்லைக்குள் நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் குருனாகல் மாநகர சபை காணியில் பல்நோக்கு தொலைத்தொடர்பு மற்றும் தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்களை நிர்மாணிக்கும் போது மாநகர சபையினால் ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்களுக்கான நில வாடகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மதிப்பீடு செய்யப்படாது நில வடகை திர்மானிக்கப்பட்டிருந்தது. | தற்பொழுது உரிய காணித் துண்டிற்காக தனியான திட்ட வரைபடத்தினை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனைப் பெற்ற உடன் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது திட்டங்கள் அங்கீகரித்துக்கொள்ளப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாநகர சபையினால் நவீனமயப்படுத்தப்பட்ட MC PLAZA வில் 11 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பரீட்சிப்பின் போது உள்ளூராட்சி நிறுவன எல்லைக்குள் ஒவ்வொரு ஆதனத்தின் வாடகையையும் ஆகக் குறைந்த கேள்வி மனுப் பெறுமதியையும் பிரதம மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால் நியமிக்கப்படுகின்ற ஒரு தகமை பெற்ற நபரினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாது வருமான பரிசோதகரின் மதிப்பீட்டிற்கு இணங்க குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடைகளை மதிப்பீடு செய்வதற்காக பிரதம மதிப்பீட்டாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் அதனை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிகழ்கால மதிப்பீட்டிற்கு இணங்க வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | Motor Lorry Compactor வாகனத்தை மதிப்பீடு செய்து நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | Motor Lorry Compactor வாகனத்தின் பெறுமதியை அடுத்து வரும் காலங்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபையின் ஒரு காணி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சபையின் 89 காணிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் 89 காணிகளை 2023 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஊ) | கணனிகளையும் துணைக்கருவிகளையும் கணக்கீடு செய்யும் போது 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்த கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் | சபையின் அனைத்து கணனிகளும் துணைக்கருவிகளும் 2023 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதற்கு முன்னர் கொள்வனவு செய்த கணனிகளும் துணைக் கருவிகளும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் லேக் ஸ்டுடியோவிற்கு அருகாமையில் முன்னர் மலசல கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த 3.14 பேச்சஸ் பரப்பளவிலான அரசாங்கத்தின் காணியில் மாநகர சபையினால் 10 மீற்றர் நீளம் மற்றும் 5 மீற்றர் அகலமான இரண்டு மாடிக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் (Foundation) இடப்பட்டு 9*9 அளவிலான தூண்கள் (Columns) இடப்பட்டிருந்ததுடன் இதற்கான திட்ட வரைபடம் (Drawings), அங்கீகாரம் மற்றும் நிர்மாணம் சம்பந்தமான எந்த தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படபடவில்லை. | உரிய தகவல்களைப் பரீட்சித்துப் பார்த்து துரிதமாக கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது திட்டங்கள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.7.1 ஒப்படைக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மாநகர சபையின் நிலுவையான நிர் வரி வருமானத்தை அறவிடுவது சம்பந்தமாக 2021 பெப்ரவரி 09 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக்கூட்டத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் குறிப்பின் பந்தி இலக்கம் 2.1 இற்கு வழங்கிய பணிப்புரை ‘‘நிலுவைப் பணத்தை உடனடியாக அறவிட்டு அது தொடர்பான ஒரு அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் குழுவிற்குச் | நிலுவையான நீர்க் கட்டணங்களை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க கணக்குகள் குழு வழங்கிய பணிப்புரை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்குமாறும்'' ''உரிய குழாய் முறைமையினை திருத்தம் செய்து வீணாக போகும் நீரினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பணிப்புரை விடுத்திருந்தது.'' எனினும் நிகழ்கால நிலைமையை பரீட்சித்த போது 2022 திசெம்பர் 31 ஆந் தகிதியில் உள்ளவாறு ரூபா 66,172,032 நீர் நிலுவை காணப்பட்ட 7782 பாவனையாளர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டி இருந்தது. இந்த நிலுவைகளில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 19,030,289 ஆகும். | | |
| (ஆ) | 2020 யூலை 16 ஆந் திகதிய GC-6(48) ஆம் இலக்க பொதுச் சபையின் இணக்கப்பாட்டின் கீழ் மாநகர சபையின் உறுப்பினர்களுக்கு வட்ஸ்அப் அல்லது ஈமெயில் மூலம் சபை அறிக்கைகளை வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக அவர்களுக்கு லெப்டொப் கணனி ஒன்றிற்கு ரூபா 194,000 செலவு செய்து 19 மாநகரசபை உறுப்பினர்களுக்கும் ஒரு சாரதிக்கும் கணனி வழங்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி பதவிக்காலம் முடிவடையும் 2023 மார்ச் 19 ஆந் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அதாவது 2023 மார்ச் 17 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் தீர்மானம் இலக்கம் SC/67/2023/03/17/MSD/CA | லெப்டொப் கணனியை மாநகர சபைக்கு ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையின் ஆதனத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துகின்ற நபர்கள் தொடர்பாக சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இன் வழங்கிய லெப்டொப் கணனியின் மதிப்பீட்டுப் பெறுமதியை அறவிட்டு கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குவது பொருத்தமானது என பொதுச்சபை ஏகமனதாக தீர்மானம் எடுத்திருந்தது. அதற்கிணங்க கணனியின் நிகழ்கால பெறுமதி ரூபா 266,333 இனைச் செலுத்தி கணனியை பெற்றுக்கொள்ளலாம் என மாநகர சபை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2023 மே 12 ஆந் திகதி வரை ஒரு உறுப்பினர் மாத்திரம் கணனியை திருப்பி ஒப்படைத்திருந்தார். அதற்கிணங்க சபையின் ஆதனத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவது சம்பந்தமாக மாநகர சபை எதுவித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | | |

**3.7.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நீர்ப் பிரிவின் மூலம் நீரப் பாவனையில் இடம்பெறுகின்ற மாற்றங்களை இனங்காண்பதற்காக நீர் மானியை பொருத்துதல் மற்றும் குழாய் மூலம் நீரை பகிர்ந்தளிக்கும் முறைமையை நாளதுரையாக்குவதற்காக நீர் மானியை பொருத்துவதற்கு ரூபா 264,700 செலவு செய்து கொள்வனவு செய்திருந்த நீர் உபகரணம் எதுவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | நகரம் பொறியியலாளர் பிரிவின் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுதலுக்கு இணங்க நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் உரிய பொருள் விபரக் குறிப்பிற்கு ஒத்திருக்காததனால் அவை பொறியியல் பிரிவினால் வேண்டிக்கொள்ளப்படாதத னால் களஞ்சியத்தில் எஞ்சியுள்ளது. | பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியிருக்காத பொருட்களை கொள்வனவுசெய்தமை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 யூலை மாத்தில் கொள்வவு செய்த ரூபா 1,236,400 பெறுமதியான PE நீர் உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2023 மே 16 ஆந் திகதி வரை எந்த பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. | குருனாகல் மாநகர சபை எல்லைக்குள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் மற்றும் மாநகர சபை எல்லைக்கு வெளியே பிரதேச சபை எல்லைக்குள் குருனாகல் மாநகர சபையின் மூலம் நீர் வழங்கலினை வழங்கும் வகையில் PE குழாய் முறைமை பதிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது பெறுகைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 ஒப்பந்த நிருவாகம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **(அ)** | **மத்திய சந்தை I ஆம் கட்டத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம்** | | |
| (i) | குருனாகல் மாநகர சபையின் மத்திய சந்தையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் I மற்றும் II ஆகிய இரண்டு கட்டிடங்களுக்காகவும் ஒரு தனியார் நிர்மாண நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து நிர்மாண நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்த நிர்மானத்திற்காக வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் எதுவித நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்படாததுடன் இச்செயற்திட்டத்திற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் முழுக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒரு செயற்திட்டமாக | CIDA நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க எந்தவொரு கேள்தாரருக்கும் இச்செயற்திட்டம் தொடர்பாக தங்களிடம் உள்ள தகமை என்ன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டிக் கோவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இப்பெறுகை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க குருனாகல் மாநகர சபையினால் உரிய செலவு மேற்கொள்ளப்பட்டது. | ஒரு செயற்திட்டத்தினை நிறைவேற்றுதலானது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் முழுமையான செயற்திட்டத்திற்காகவும் முழுக்கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். அனைத்து கேள்வி மனுதாரர்களும் கேள்வியில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்ப்படுத்த வேண்டியிருந்தும் இரண்டு கட்டங்களாக 02 வெயற்திட்டங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததது. | | |
| (ii) | குழு அறிக்கையின் மூலம் பொறியியலாளர் மதிப்பீடானது ரூபா 687,068,527 தொகையான கேள்வி ரூபா 957,518,334 தொகைக்கு ரூபா 270,449,807 அதிகமாக அதாவது 41 சதவீத்திற்கு மேற்பட்ட உயர் சதவீதத்திலிருந்து சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. விலை மனுவானது பொறியிலாளர் மதிப்பீட்டினை விட 15 தசவீத்தினை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் கேள்வி மனு நிராகரிக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | மதிப்பீட்டுத் தொகையினைவிட 41 சதவீதம் அளவான முரண் காணப்படுவதனால் மீண்டும் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | MC - Plaza கட்டிடத்தினை திருத்தம் செய்தல் | | |
| | 2020 ஆம் ஆண்டில் மாநகர சபை நிதி ஏற்பாட்டின் மூலம் MC-Plaza கட்டிடத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 36,499,364 தொகைக்கு பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 36,575,000 தொகைக்கு சென்ரா கொன்ஸ்ட்ரக்சன் | | |

| | | | |
|---|---|---|---|
| நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி வளவில் செயற்திட்டமடம் பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 38,116,936 பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் சம்பந்தமாக மேற்கொண்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (i) | இக்கட்டிடத்தில் மத்தியப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறைமை செயற்படாதுள்ளதனால் அதனை அகற்றுதல், பல புதிய வியாபார நிலையங்களை நிர்மாணித்தல், தற்பொழுது அதிக அளவில் பழுதடைந்துள்ள மின்சார படிக்கட்டு முறைமையை மீண்டும் பொருத்துதல், மலசல கூட முறைமை மற்றும் உட்கூரையை திருத்தி இக்கட்டிடத்திற்கு புதிய தோற்றத்தை வழங்குவதற்கு GC/06/20/2020/11/12 ஆம் இலக்க பொதுச் சபை இணக்கப்பாட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட சில வேலை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மின்சார படிக்கட்டு முறைமையை பொருத்துதல் மற்றும் ஏணிப்படி ஆகிய 02 வேலை விடயங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீட்டின் பிரகாரம் வேலையை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8:13:1, 8:13:2 மற்றும் 8:13:3 ஆம் பிரிவுகளின் | மேலதிக வேலை விடயங்களானது தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகரப் | மேலதிக வேலையானது மதிப்பீட்டுப் பெறுமதியில் 10 |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வேலைகளின் தன்மை தரம் அல்லது அளவினை மாற்றுவதற்காக வசேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான விசேட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 19,609,744 தொகையான மேலதிக வேலையானது பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதியில் 10 சதவீத்தினை மிகைக்காதிருக்க வேண்டிய போதிலும் பொறியியலாளர் மதிப்பீட்டிலுள்ள வேலை விடயங்களை நிறைவேற்றாது 53 சதவீதமான மேலதிக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. | பொறியியலாளர், ஆகியோர் சிபாரிசு செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | சதவீதம் அளவான வித்தியாசத்தினுள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iii) | அங்கீகரித்த பொறியியலாளர் மதிப்பீட்டில் 50% அளவான பெறுமதியான மின்சார படிக்கட்டு முறைமையை பொருத்துதல் மற்றும் மின்சார ஏணிப்படியை மீண்டும் பொருத்துதல் ஆகிய இரண்டு வேலை விடங்களும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் மேற்கூறிய ஒப்பந்தத்தினால் | மின்சார படிக்கட்டினை பொருத்துதல் அத்தியவசியமான வேலையாக இருந்த போதிலும் இந்த ஒப்பந்த காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததானது இதனைப் பெற்று பொருத்துவதற்கு அப்போது காணப்பட்ட நிலைமைக்கு இணங்க ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்துள்ளதினாலாகும். | மதிப்பீடு திருத்தம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்காக முழுமையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தம் செய்யாத மின்சார படிக்கட்டினை தயார்படுத்துவதற்காக குறைநிரப்பினை அங்கீகரித்துக்கொள்வதற்கும் 2022 பாதீட்டிற்கு சமர்ப்பிப்பதற்கு GC/06/32/2021/10/18/ED ஆம் இலக்க நிலையியல் குழுவின் சிபாரிசு பொதுச் சபையினால் ஏகமனதாக இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அவதானிக்கப்பட்டதானது அத்தியவசியமான வேலை விடயங்களை நிறைவேற்றாது மேலதிக வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது என்பதாகும். | எனவே 2021 ஆம் ஆண்டு இது மேற்கொள்ளப்படாததுடன் 2022 ஆம் ஆண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (iv) | அங்கீகரித்த பொறியியலாளர் மதிப்பீட்டின் உடன்படிக்கை செய்து இணங்கிக் கொண்ட பெறுமதியில் நிறைவேற்றப்படாத 23 விடயங்களின் பெறமதி ரூபா 19,722,642 ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 53 சதவீதமாகும். | பொறியியலாளர் மதிப்பீட்டின் வேலை விடயங்களை ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்த போதிலும் புதிய நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது உரிமையாளரின் (Client) விருப்பத்திற்கு இணங்க அவற்றில் சில விடயங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீட்டிற்கு இணங்க நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (v) | கேட்பு மனு கோருவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுத் தீர்மானத்திற்கு இணங்க CIDA 5 அல்லது அதற்கு மேற்பட்ட தகமைகளுடனான ஒப்பந்தக்காரர்களிடமி | சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கும் குறிக்கோளில் C-5 தரத்தில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. | பெறுகை அறிவித்தலில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களை கொண்டு பெறுகை அறிவித்தல் வெளியிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ருந்து கேள்வி மனு கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் பத்திரிகை அறிவித்தலில் கேள்வி மனுதாரர்களின் தகமைகளாக C-5 ஆக மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அதிகளவு போட்டி கேட்புமனுதாரர்கள் முன்வருவதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | | |
| (vi) | பெறுகை ஆவணங்களைப் பரீட்சித்த போது இரண்டு ஒப்பந்தக்காரர்களால் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு நிறுவனத்தினால் சமர்ப்பித்த விலை மனுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டு நடைமுறை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | துஸார ரூபிங் கம்பனியின் கேள்வி ஆவணங்கள் கோவையில் இருக்கவில்லை. | பெறுகை நடைமுறையினைப் பின்பற்றும் போது வெளிப்படைத் தன்மையுடன் பார்க்க கூடிய நடைமுறைகளுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (vii) | இறுதி விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கும் போது ஒரு AC Plant இனை நீக்குவதற்கு விசேட விலைப் பகுப்பாய்வினை சமர்ப்பித்து கேள்வி மனுதாரர் சமர்ப்பித்த ரூபா 60,000 பணத்திற்குப் பதிலாக ரூபா 761,394 செலவினைச் | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீட்டின் முரண்பாடுகள் சம்பந்தமாக ஒப்பந்தக்காரருடன் கலந்தாலேசித்து மதிப்பீட்டுப் பணத்திற்கு இணங்கிக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்து ரூபா 701,394 பணம் மீகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (viii) | ஒப்பந்தக்காரரினால் தொடக்க மதிப்பீட்டிற்கு இணங்க உடன்படிக்கை செய்த பெறுமதி ரூபா 36,575,000 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 18,479,222 பெறுமதியான வேலைப் பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இறுதி விலைப்பட்டியலினைப் பரீட்சித்த போது தொடக்க டமதிப்பீட்டில் இல்லாத ரூபா 19,634,694 பெறமதியினைக் கொண்ட புதிய வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிரந்தன. எனினும் மாநகர சபையினால் இதற்காக திருத்திய கிரய மதிப்பீட்டினை தயாரித்து அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட பணமான ரூபா 36,575,000 பணத்தில் உடன்படிக்கையில் குறிப்பிட்ட வேலை நடவடிக்கைகளுக்காக ரூபா 38,116,936 பணமும் மேலதிக வேலையாக ரூபா 19,637,711 பணமும் செலவு செய்து அந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட ஒப்பீட:டு ரீதியான அறிக்கை முறைப்படியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்காக தனியான திருத்திய கியம் தேவையற்றதாகும். | திருத்திய கிரய மதிப்பீடு இல்லாது ஒப்பந்தக்காரரினால் நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலைவகளுக்காக கொடுப்பனவு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ix) | விலைப்பட்டியல்களையும் ஒப்பந்தக்காரரின் கேள்வி மனுவினையும் பரீட்சித்த போது கேள்வி மனுவில் குறிப்பிடப்பட்ட அளவினை விட நிறைவேற்றியுள்ள அளவுக்கு கொடுப்பனவு செய்து 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் பெறுமதி ரூபா 4,331,106 ஆகும். | இதில் விடய இலக்கம் 04, 08, 10 ,32, 36, 49, 58 மற்றும் 61 இதற்காக இந்த திருத்த வேலைகளின் போது உண்மையாகவே வேலைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக முறைப்படியாக அளவீட:டுப் பத்திரம் மற்றும் விலைப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. | கேள்வி மனுவில் குறிப்பிட்ட அளவினை மிகைத்து கொடுப்பனவு செய்யும் போது அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளபடியான அளவீட்டு பத்திரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (x) | இச்செயற்திட்டத்திற்காக கட்டிட விலை பகுக்காய்வின் விலை பயன்படுத்தப்படாது மேலதிக வேலைகளுக்காக விசேட விலைகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக 08 வேலை விடயங்களுக்கு ரூபா 19,662,047 பணம் மிகையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சந்தையில் காணப்படுகின்ற விலைகளுக்கு இணங்க விலைப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. அதனைப் பரீட்சித:துப் பார்த்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | கட்டிட விலைப் பகுப்பாய்வு காணப்படுகையில் அந்த விலைகளுக்கு இணங்க கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (xi) | விசேட விலைப் பகுப்பாய்வினை ஒப்பந்த நிறுவனம் தயாரித்திருந்தும் பொறியியலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் வழமைக்கு மாற்றமான விலைப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க மேலதிக வேலைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கு கட்டிட அங்கீகரிக்கப்பட்ட விலைகள் காணப்படுகின்ற விடயங்களுக்காகவும் விசேட விலைப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் தயாரிக்கப்பட்ட சில விசேட விலைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது பொறியியலாளர் பரீட்சித்து அங்கீகாரம் | தவறுதலாக அந்த ஆவணத்திற்காக கையொப்பமிடப்படாததுடன் முறைப்படியாக அந்த விலைப்பகுப்பாய்வினைப் பரீட்சித்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | விசேட விலைப் பகுப்பாய்வு பொறியியலாளரினால் பரீட்சித்துப் பார்த்து அங்கிகரிக்கப்படுதல் வேண்டும். |

வழங்கியிருக்கவில்லை எனவும் ஒப்பந்தக்காரர் தயாரித்த வழக்கத்திற்கு மாற்றமான விலைப் பகுப்பாய்விற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது.

**(இ) வைத்தியர் சில்வா மாவத்தையில் கடைகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்.**

இக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி தேசிய போட்டி விலை கோரல் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த கேள்வி மனுவைத் திறத்தல் 2022 செப்தெம்பர் 14 ஆந் திகதியாக தெரிவிக்கப்பட்டிருந்தும் இக்கடைகள் நிர்மாணிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதி சபைக்கு சொந்தமானது அல்ல எனவும் தமது பள்ளிவாசலுக்குச் சொந்தமானது என குருனாகல் ஜாமிஉல் அஸ்ஹர் பஸார் ஜும்ஆ பள்ளிவாசலினால் சபையின் இந்த தீர்மானத்திற்கு மேன்முறையீடு செய்து குருனாகல் மாகாண நீதவான் நீதிமன்றத்தில் ரிட் கட்டளையினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் ரிட் கட்டளையை பெற்றுக்கொள்ளும் வரை இக்கடைகளை குத்தகைக்கு வழங்குதலினை தடுக்குமாறு உபதடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறையினை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியின் தெளிவான

வடமேல் மாகாண நீதவான் நீதிமன்றத்தில் HCW 11/2022 ஆம் இலக்க ரிட் விண்ணப்பம் கோவை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுதும் வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற ஒரு வழக்காகும். இந்த வழக்கிற்காக இன்றுவரை தடை உத்தரவு வழங்கப்படவில்லை.

பெறுகை சட்ட விதிகள் பின்பற்றப்படாததன் மூலம் மாநகர சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக பரீட்சிப்புக்களை நடாத்தி மிகைக் கட்டணம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபை பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. | | | |
| (ஈ) | சுந்தரா பொல கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நிலத்தை நிரப்பும் செயற்திட்டம். | | | |
| | (i) | மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக வடிவமைத்து நிர்மாணிக்கும் முறைமையின் (Design and Build) கீழ் நிர்மாணிப்பதற்கு செயற்திட்ட பிரேரணையை கோரி L.D கன்ஸ்ட்ரக்சன் மற்றும் சனபவர் கன்ஸ்ட்ரக்ஸன் கூட்டுமுயற்சி உடன் ரூபா 100,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்து செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | 2021 ஆம் அண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 42 மில்லியன் மீண்டுவரும் செலவின் கீழும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 30 மில்லியன் பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. | வருடாந்த பாதீட்டிலிருந்து நிதி ஏற்பாடு வழங்கப்படாத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பாடதிருத் தல் வேண்டும். |
| | (ii) | 02 தனியார் நிர்மாண நிறுவனங்கள் ஒரு கூட்டு முயற்சியாக இந்த ஒப்பந்தத்ததை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்திருந்த போதிலும் பத்திரிகை அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்த நிறுவனம் ICTAD | CIDA பதிவு செய்தல் தொடர்பான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறுகை அறிவித்தலில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களுடன் பெறுகை அறிவுறுத்தல் வெளியிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரப்படுத்தலுக்கு இணங்க C3 அல்லது மேற்பட்ட தரத்தில் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இந்த 02 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் மாத்திரம் ICTAD பதிவு செய்தலினைப் பெற்றிருந்தது. | | |
| (iii) | இந்த ஒப்பந்தத்திற்காக அடிப்படைச் செலவுகளுக்கான மதிப்பீட்டிற்கு இணங்க மொத்த ஒப்பந்த பெறுமதியான ரூபா 239,843,470 பணத்தில் ரூபா 25,870,000 பணத்திற்கான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் தொடக்க செலவுகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது அனைத்து தொடக்க வசதிகளும் ஒப்பந்தக்காரரினால் நிறுவன வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மதிப்பீட்டில் குறிப்பிட்ட அனைத்து தொடக்க வசதிகளும் வழங்கப்படாதிருந்த 03 விடயங்களக்காக ரூபா 2,850,000 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | சேவை வழங்குனர் / ஆலோசகர் உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கு தேவையான மேசை கதிரை வழங்கி தயார்படுத்தப்பட்டுள்ளதுடன் தொடர்பாடல் வசதிகள் வழங்குவதன் கீழ் WI -FI இணைய தள வசதிகளும் தொடர்பாடல் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆலேசக பதவிணனியினரின் பயன்பாட்டிற்காக அந்த அலுவலகத்திற்கு அருகாமையில் மலசல கூட வசதிகளும் நியம தரத்திற்கு இணங்க வழங்கப்பட்டுள்ளது. | செய்யப்படாத வேலைகளுக்காக போலியான விலைப்பட்டியல்கள் தயாரிக்காதிருத்தல் வேண்டும். |
| (iv) | விடய இலக்கம் 1:14 இன் கீழ் ஒப்பந்தக்காரரின் பதவியணியினர்களுக்காக ரூபா 9,260,000 தொகைக்கு கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த கிரயத்திற்கு இணங்க பதவியணியினரினை | தொடக்க கட்டத்தின் போது முழுமையான செயற்திட்டத்தில் ஒரு பகுதி மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பகுதியின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முழுமையான செயற்திட்டத்தில் செய்ய வேண்டிய அனைத்து | செய்யாத வேலைகளுக்காக போலி விலைப்பட்டியல்கள் தயாரிக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இதற்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீடு செய்யப்பட்ட பதவியணியினர் பூரணப்படுத்தப்படாதிருந்தும் ஒப்பந்த பெறுமதியில் 40% ஆன ரூபா 3,504,000 செலுத்தப்பட்டிருந்தது. | அம்சங்களையும் மேற்கொள்ளுதல் அத்தியவசியமானதாகும். | |
| (v) | விடய இலக்கம் 1:14 இன் கீழ் ரூபா 239,843,470 ஒப்பந்த பெறுமதியானது ஒப்பந்தக்காரரின் பதவியணியினருக்காக ரூபா 9,260,000 தொகைக்கு கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் ரூபா 100,000,000 உடன்படிக்கை செய்து பெறுமதியை பதவியணியினர்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது தொடக்க பதவிணயினர் கிரயத்தின் ஒப்பந்த பெறுமதியானது 41% என்பதனால் பதவியணியனருக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 3,796,600 ஆக இருக்க வேண்டியதுடன் அப்பெறுமதியில் ஒப்பந்தம் பூர்த்தியடையும் சதவீதத்திற்கு இணங்க பெகாடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க பட்டியல்களைப் பரீட்சித்த போது ரூபா | கடமைக்காக சமூகமளிக்கின்ற ஒப்பந்தக்காரர்களின் உத்தியோகத்தர்கள் சம்பவக் குறிப்புக்களை ஈடுபடுத்துதல் இடம்பெற்றிருக்காததுடன் ஆலோசனை உத்தியோகத்தர் மாத்திரம் தேவையான வேலைகளில் சம்பவக் குறிப்புக்களை ஈடுபடுத்துகின்றனர். | மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை மிகைத்து கொடுப்பனவு டிசய்யும் போது அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு உள்ளபடியான அளவீட்டுப் பத்திரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,985,360 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (vi) | விலைப்பட்டியலின் 3.2.3 ஆம் விடயத்திற்கு இணங்க Leachate Line Preparation இற்காகவும் ஒட்டுமொத்த செயற்திட்டத்திற்காக ரூபா 10,027,500 பணம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் இதில் ரூபா 7,019,250 பணம் அதாவது 70 சதவீதம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்கு இணங்க 2022 செப்தெம்பர் 12 ஆந் திகதி கணக்காய்வினால் உறுதிப்படுத்துகையில் 1000 160 mm PVC குழாயின் சந்தை விலை ரூபா 53,996 ஆக இருந்ததனால் ரூபா 1,799,900 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பிழையான விலைப்பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | விடய இலக்கம் 3.2.3 இன் கீழ் Leachate Line Preparation இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணமாகிய ரூபா 7,019,250 பணத்தில் இந்த குழாய் வழங்குவதற்காக ரூபா 7,019,250 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | செய்யாத வேலைகளுக்காக போலி விலைப்பட்டியல்கள் தயாரிக்காதிருத்தல் வேண்டும். |

**(உ) குருனாகல் மாநகர சபையினால் சிகிச்சை நிலையமும் முன்பள்ளியும் நிர்மாணித்தல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | குருனாகல் மாநகர சபையினால் சிகிச்சை நிலையமும் முன்பள்ளியும் நிர்மாணிப்பதற்காக | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறுகை அறிவித்தலினை வெளியிடும் போது உத்தியோகத்தர்கள் பொறுப்பாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 230,186,606 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு CCD கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்துடன் ரூபா 232,122,585 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் விலைப்பட்டியல்களுக்கு இணங்க ரூபா 10,262,744 பணம் செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமான கோவைகளை பௌதீகரீதியாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. கேள்வி கோருவதற்காக தொழில்நுட்ப சபை தீர்மானத்திற்கு இணங்க CIDA 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருவதற்குத் திர்மானிக்கப்பட்டிருந்தும் பத்திரிகை அறிவித்தலில் கேள்வி மனுதாரர்களின் தகமையாக C3 மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அதிக போட்டியான கேள்விதாரர்கள் முன்வருவதற்கிருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | | செயற்படுடுதல் வேண்டும். |
| (ii) | புதிய சிகிச்சை நிலையத்தை நிர்மாணிக்கும் போது பழைய சிகிச்சை நிலையத்திலிருந்து கழற்றி அகற்றப்பட்டு | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | சரியாக ஆவணப்படுத்தப்பட்டு களஞ:சியத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் களஞ்சிய இருப்பேட்டில் உள்ளடக்கப்பட்டு அறிக்கை வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | ஒப்பந்தத்தின் விலைப்பட்டியல்களைச் செலுத்தும் போது ரூபா 694,315 தொகை ஐனடந காலத்திற்காக எனக் காட்டி வேலைத்தளத்தில் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்த 6 நாட்களுக்காக இயந்தரங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் விரிவான அளவில் கருங்கற்கள் உடைத்து அகற்றுதலினை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என எதிர்பார்க்காததுடன் செயற்திட்டத்தினை ஆரம்பித்ததன் பின்னர் பரந்த அளவில் கருங்கற்களை உடைத்து அகற்றும் தேவைப்பாடு தெளிவானதால் 06 நாட்கள் காலம் வேலைத்தளத்தில் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இக்கருங்கற்கள் பரந்த அளவில் உடைத்து அகற்றப்பட்டதன் காரணமாக மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டி எற்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெகொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஊ) பஸ் தரிப்பிடத்தின் மலசல கூட முறைமையை திருத்தம் செய்யும் நிர்மாண வேலை**

| | | | |
|---|---|---|---|
| (i) | பெறுகை வழிகாட்டிக் கோலைவயின் 5:3:2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி மனுகோரும் பத்திரிகை அறவித்தலில் உள்ளடக்கப்பட | இச்செயற்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் முன்வருகின்ற கேள்விமனுதாரர்கள் கைத்தொழில் முற்றும் | பெறுகை அறிவித்தலினை வெளியிடும் போது உத்தியோகத்தர்கள் பொறுப்பாக செயறபடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய பிரதான தகமையும் அனுபவமும், CIDA தரப்படுத்தல் என்பன கேள்வியை கோருவதற்கான பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென காட்டப்பட்டிருருந்தது. அவ்வாறே கேள்வி மனுதாதர்களுக்கு வழங்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் உரிய தகமை C7 ஆக தெளிவாக காட்டப்பட்டுள்ளது. | |
| (ii) | இந்த ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 459,590 செயலாற்றல் பிணைமுறியும் ரூபா 1,838,361 முற்பண பிணைமுறியும் போலியானவையாகும். இப்போலியான சான்றிதழ் தொடர்பாக எதுவித பரீட்சிப்பும் இன்றி ரூபா 1,838,311 முற்பணமும் பகுதிக் கொடுப்பனவுப் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. 2022 ஏப்ரல் மாதம் நிதி தொடர்பான நிலையியல் குழுவின் பணிப்புரைக்கு இணங்க இந்த ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 18 இலட்சம் பணமானது முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணை முறியின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் போலியான பிணைமுறி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் இப்பணத்தை | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட உத்தியொகதத்தல்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டமை தொடர்பாக விசாரணைகள் நடாத்தி மாநகர சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளளிப்புச் செய்ய முடியாதிருந்தது. | | |
| (iii) | ரூபா 9,191,808 பெறுமதியான இச்செயற்திட்டம் 2021 திசெம்பர் 09 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அத்திகதியில் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் இச்செயற்திட்டம் எந்த காரணமும் இன்றி 2022 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை காலத்ததை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை செய்த காலத்தை நீடிப்பதாயின் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | செயற்திட்டத்தின் பெறுமதியில் ரூபா 7,438,404 பெறுமதியான வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரர் நடவடிக்கை எடுக்காதிருந்தும் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிர்மாண நடவடிக்கைகளானது பொறுப்பக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் கண்காணிப்பிற்கு உட்படுதல் வேண்டும். |
| (v) | இந்த மலசல கூட முறையை நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டதன் காரணமாக பஸ்தரிப்பிட கடை உரிமையாளர்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் காணப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மலசல கூடத்தினை பல நபர்கள் அசுத்தப்பட்டுத்தியிருந்தமையும் | பதில் வழங்கப்படவில்லை. | பொதுமக்களுக்கு சேவை வழங்குவதற்கு முடியுமான வகையில் செயற்த்திட்டத்தை துரிதமாக பூர்த்திசெய்தல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. சில மலசல கூடங்களின் கொங்கிரீட்டில் நீர் சேர்த்து நுளம்பு பெருகுவதனைப் போல இந்த மலசல கூடங்களிலிருந்து அதிக துர்நாற்றம் வீசுவதும் அவதானிக்கப்பட்டது.

## 04. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | குருனாகல் மாநகர சபையின் 04 வாகன நிறுத்துமிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக பத்திரிகை அறிவித்தலினை வெளியிட்டு விலை மனுக்கள் கேரி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதிக விலையினை சமர்ப்பித்த Broad Way Car Park ளுழடரவழைெ நிறுவனத்திற்கு மேற்கூறிய 4 வாகன தரிப்பிடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. போதிராஜா மாவத்தை குத்தகைக்கு பெற்ற Broad Way Car Park நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக இரண்டாவது கூடுதல் விரலை மனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமான கேள்வி கோரல் ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரீட்சித்து அங்கிகரிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய பெறுகைக்குரிய கேள்வி கோரல் | அடுத்துவரும் காலங்களில் அனைத்து கேள்வி ஆவணங்களும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆவணங்களக்காக பெறுகைக் குழுவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் அங்கீகரித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | வருடாந்த குத்தகைப் பணத்தில் 1/3 பங்கினை உடன்படிக்கை செய்யும் சந்தர்ப்பத்திலும் 2/3 பங்கினை உடன்படிக்கை செய்து மூன்றாம் மாதத்தில் ஆரம்பித்து 06 மாதங்களுக்குள் சமமான 06 தவணைகளில் செலுத்த வேண்டிய போதிலும் Broad Way Car Park நிறுவனத்தினால் பிரதான வீதி i, பிரதான வீதி ii மற்றும் மிஹிந்து மாவத்தை ஆகிய வாகன நிறுத்துமிடங்களுக்காக செலுத்த வேண்டிய 2/3 பங்கு பணமாகிய ரூபா 3,579,520 செலுத்தாது விடப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமெனவும் கட்டணத்தை செலுத்தவில்லையாயின் மீண்டும் தெரியப்படுத்தாது உடன்படிக்கையை இரத்துச் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் SFC/05/2022/09/27/MA/R/7 ஆம் இலக்கத்தின் கீழ் நிதி தொடர்பான நிலையியல் குழு சிபாரிசு செய்துள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 94,000,000 தொகையான 25 செயற்திட்டங்கள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வெவ்கலே மக்களுக்கு மலசல கூட முறைமையை நிர்மாணிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டதுடன் மிகுதிப் பணம் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |